1990 மார்ச் 24]

ஊராட்சிகளை மாற்றி அமைத்தல்

*1100—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் ஊராட்சிகளை மாற்றி அமைக்க கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சாணார்பட்டி யூனியனில் செம்மண்நல்லூர் பஞ்சாயத்தில் கூடுதலான மக்கள் தொகை இருக்கிற காரணத்தினாலே பொதுமக்கள் நலன் கருதி, அதை செம்மண்நல்லூர் பஞ்சாயத்தாகவும், டி. ராமராஜபுரம் பஞ்சாயத்து ஆகவும் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நத்தம் ஊராட்சி ஒன்றியம் 21 ஊராட்சிகளையும் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் 22 ஊராட்சிகளையும் கொண்டுள்ளது. இவைகளில் மொத்தமாக முறையே 1 லட்சத்து 6 ஆயிரத்து 946, மற்றும் 86 ஆயிரத்து 716 ஆகிய மக்கள் தொகை கொண்டதாகத்தான் இருக்கிறன. இவை இரண்டையும் தனித்தனியாக பிரித்து, அதிலே ஒன்றை எடுத்து பிரிப்பதால், அதனை ஒன்றாக நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. இருந்தாலும் அது பற்றி பரிசீலிப்பதற்கு உரிய நேரத்தில் அந்த தடை நீக்கப்பட்டதற்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பஞ்சாயத்து யூனியன்கள் கூடியது ஒரு நத்தம் தொகுதி. ஆகையால் அதில் நிறைய கிராமங்கள் இருக்கிற காரணத்தால், அதுவும் அந்த சேத்தூர் பஞ்சாயத்தில் கூடுதலான ஜனத்தொகை இருக்கிறது. அதிலே குறிப்

பாக 20, 25 கிராமங்கள் இருக்கிற காரணத்தாலே பொது மக்களுக்கு சேவை செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை இருப்பதால், அந்த சேத்தூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அந்த மக்களுடைய நலன் கருதி அரசு அதற்கு உடனேயே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பிரிப்பதோ சேர்ப்பதோ அதிலே மக்கள் தொகையை மட்டும் கணக்கு எடுத்துக் கொள்ள இயலாது. நிர்வாக வசதி இருக்க வேண்டும். நிதி வருவாய் போதிய அளவுக்கு அமைய வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளில் ஒத்து இருக்குமானால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

நெல் அரவை ஆலைகளில் சோதனை

*1641—திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு உணவுமற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1988–89 ஆம் ஆண்டில் மணச்சநல்லூர் (திருச்சி மாவட்டம்) நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனை போடப் பட்டதால் எவ்வளவு பதுக்கல் நெல் பிடிக்கப்பட்டது?

(ஆ) அதில் பறிமுதல் செய்யப்பட்டது எவ்வளவு?

(இ) திருப்பி கொடுக்கப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மச்சணநல்லூர் நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனையின்போது பதுக்கப்பட்டிருந்த 2700.74 குவிண்டால் நெல்லும் மற்றும் 131.29 குவிண்டால் அரிசியும் பிடிக்கப் பட்டது.

(ஆ) பிடிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற தடையாணை சில வழக்குகளில் அமலில் இருந்ததால், கைப்பற்றுதலின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க இயலாமல் அதனால் பறிமுதல் செய்யப்படாமல் இருந்தது. இவ்வினங்களில் 13—7—1989 நாளிட்ட உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி, மேல் நடவடிக்கை தொடரும்போது அரிசி ஆலை அதிபர்கள் மீண்டும் உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் தொடர்ந்தனர். தற்போது அதன்மீது அரசு தொடர்ந்துள்ள வழக்கில் 19–3–1990 அன்று அரசு சார்பாக தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. எனவே மேல் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப் படும்.